# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **202/மா/2017**

ஆணை எண். **03/2018**

நாள் : **03/01/2018**

கே. பேபி,
தஞ்சாவூர்.

– **முறையீட்டு மனுதாரர்**

மாநகராட்சி ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி.

– **எதிர் மனுதாரர்**

தஞ்சாவூர் மாநகராட்சி, சேவப்ப நாயக்கன் வாரி, சீனிவாசபுரம், 38, கீழ்க்கரை முகவரியில் வசிக்கும் திருமதி K. பேபி அவர்களின் 14.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2017 அன்று பெறப்பட்டு 202/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தஞ்சாவூர் மாநகராட்சி, சேவப்ப நாயக்கன் வாரி, சீனிவாசபுரம், 38, கீழ்க்கரை முகவரியில் வசிக்கும் திருமதி K. பேபி என்பவர் தஞ்சாவூர் மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றிய தான் 30.06.2016 அன்று பணியிலிருந்து வயது மூப்பின் காரணமாக ஓய்வு பெற்றுவிட்டதாகவும், எனினும் தனக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்படவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. மாநகராட்சி ஆணையரின் அறிக்கையினை பரிசீலனை செய்ததில், 15.12.2017 நாளிட்ட மாநகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை எண்.11477/பி2/2016–இல் மனுதாரருக்கு ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதியப் பலன்கள் வழங்கி ஆணையிடப்பட்டுள்ள நிலையில் இந்நேர்வு சம்பந்தப்பட்ட நடவடிக்கையினை முடித்து வைத்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 3–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

4-1-18

4/1/18

பெறுநர்

1. மாநகராட்சி ஆணையாளர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்.

2. திருமதி கே. பேபி,
38, கீழ்க்கரை,
சேவப்ப நாயக்கன் வாரி,
சீனிவாசபுரம்,
தஞ்சாவூர் – 613 009.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி